**செ. கு. எண்: 194** **நாள்: 07.11.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி** K. **பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 7.11.2018

கடலூர் மாவட்டம், வேப்பூர், ஐவதகுடி கிராமம் அருகே, இன்று (7.11.2018) காலை திருச்சியிலிருந்து சென்னை நோக்கி வந்து கொண்டிருந்த கார், வேப்பூரிலிருந்து கள்ளக்குறிச்சி நோக்கி சென்று கொண்டிருந்த பேருந்து மீது மோதியதில், காரில் பயணம் செய்த மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்களின் கூடுதல் சிறப்பு நேர்முக உதவியாளர் திரு. லோகநாதன் மற்றும் அவரது மகன்கள் திரு. நிர்மல் குமார் மற்றும் திரு. சிவராமன் ஆகிய மூன்று நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த மூன்று நபர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த செய்தி குறித்து அறிந்தவுடன் அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் உடனடியாக செய்து கொடுக்கவும், உயரிழந்தவர்களின் குடும்பத்தினரை சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறவும், காயமடைந்தவருக்கு உயரிய சிகிச்சை அளிக்கவும் மாவட்ட நிருவாகத்திற்கு உத்தரவிட்டுள்ளேன்.

விபத்தில் காயமடைந்தவர் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற எனது விருப்பத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

K. **பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**